REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி ௵ புரட்டாசி ௴ 1918-ம் ஆ௵ செப்டம்பர் ௴	மதி — கஉ.

உள்ளுறை:

		பக்கம்.
க.	விவேகம்.	கரு௩.
உ.	பாரதம்பாடிய பெருந்தேவனார்.	கரு௫.
௩.	பத்துப்பாட்டு.	கருஎ.
௪.	தமிழ்நாட்டுத் தற்காலத்தார்.	கருகூ.
ரு.	பாப்பற்றிய இராகங்கள்.	க௪ரு.

பத்திராசிரியர் :— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	ரூ ?	வெளிநாட்டுக்கு ...	ரூ க
வெளியூர்க்கு ...	ரூ ஆ	தனிப் பிரதி	... அணா க

முக்கிய அறிவிப்பு.

செந்தமிழ்த் தெய்வத்தின் திருவருள் வலியானே நடைபெற்றுவரும் "தமிழ் மகவு" என்னும் பத்திரச்சிறுமி (சிறு பெண்) தோன்றிப் பன்னிருமதியும் பாங்குடன்கழியத் துன்னிய இரண்டா மாண்டின்தொடக்கத்தில் வளர்ச்சிக் கறிகுறியாக இன்னும் நான்கு பக்கங்கள் சேர்க்கப்படும். உருவத்திற்கேற்ற உணவளிக்க வேண்டுமன்றே? அதற்காகத்தான், உள்ளூர்ச் சந்தா இனி ரூ ௩-ம் வெளியூர்ச் சந்தா ரூ ௧-ம் ஆக நியமிக்கப் பட்டன.

காகிதவிலை யேற்றத்தின் கஷ்டத்தோடு இதை நடத்த வேண்டுவது தமிழ்மொழிக்குச் செய்யவேண்டிய கடமையைத் தெரிவிக்கவேயாம். இராஜாங்கத்தார் கவனிக்காத குறையால் நிலைகுலைந்த நமது தமிழ்ப்பாஷையை நாமே காத்துக்கொள்ள வேண்டிய தருணம், இது. ஆகையால், தமிழர்யாவரும் தங்கள் கடமையைச் செலுத்தவேண்டும். அஃதென்னெனின் இப்பத்திரிகையைத் தாம் வாங்குவதுடன் தங்கள் நண்பர்களும் வாங்குதற்கு வற்புறுத்துவதே யாகும். இஃதெமக் கென்றெண்ணாது தமிழ்க்குச்செய்யு முபகாரமென் றெண்ணவேண்டும். ஒவ்வொரு சந்தா தாரர்களும் வேறு ஒவ்வொரு சந்தாதாரரையேனும் சேர்த்தனுப்ப வேண்டுகிறோம்.

இரண்டாம் வருடத்திய முதல் பத்திரிகை அடுத்தமாதம் வி-பி-மூலமாகவரும். சந்தாவைச் செலுத்திப் பெற்று மகிழ வேண்டுகின்றோம். நமது பத்திரிகையில் இனிப் பல அரிய விஷயங்கள் சுலபமாய வழியில் தக்கோர்களால் புதுமாதிரியாய் எழுதப்பட்டு வெளிவரும்.

இங்ஙனம்:

புதுவைத் தமிழ்ச் சங்கத்தினர்,

புதுவை.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி ஹு புரட்டாசி மீ 1918-ம் ஆ செப்டம்பர் மீ	மதி — கஉ.

விவேகம்.

(கஉஉ - ம் பக்கத் தொடர்ச்சி.)

தவநெறி நிற்போர் வாயினாற் பலநூல் படித்துணர்ந்து நன்மார்க்கத்தை மற்றவர்க் குரைத்துக் காலங் கழிக்காமல், தாமும் உண்மையாகவே உள்ளத் துறவடைய வேண்டும். அஃதும் இடை திரியாமலிருக்கவேண்டும். ஓதியுணர்ந்தும் பிறர்க் குரைத்துந் தானடங்கார் குங்குமஞ் சுமந்து பிறர்க் குதவித் தானதனாற் பயனடையாத கர்த்தபம் என்றே பெரியோராற் கருதப்படுகின்றனர்.

பின்னை அத்தவ நெறியாளர்க்குப் பல்வகைச்சமயப் படுகுழியில் வீழ்ந்து வருந்தல் தக்கதன்று. தந்தெய்வம் எந்தெய்வம் என்று தொடர்ந்து வழக்கிட நின்றதொரு பொருளே. ஆகலின், வேத சம்மதமாய் விளங்கும் சமனிலையாய சன்மார்க்கமே தலைப்பட்டு நின்று மெய்ப்பொருளென்றும் உள்ளதென்றும் செம்பொருளென்றும் கூறப்பட்ட அத்தெய்வத்தைச் சித்தத் திருத்தித் தியானிக்கவேண்டும். இவ்வுடற்கு அழிவுகாலம் இந்தச்

சமயந்தானென்று தெளிதல் கூடாமையால், சிவபிரானது சீ பாதங்களை எப்போதும் விடலாகாது; இப்பிறவிதப்பினால் எப் பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிதல்கூடா ஆதலின் இறை வனை மறக்கலாகாது. அரிதிற்கிடைத்த தேகமும் அறிவுமுள்ள போதே அப்பெருமானை அடைய வேண்டுமாகையால் அவன் றாளை விடலாகாது. மின்னல்போற் றோன்றியழியும் உடம்பி னைக் குறித்தே சிந்திக்காமல் கால அருமையையும் சிறுமையை யும் நோக்கிக் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். வெறுப் பாகிய துன்பத்தை ஒருவர் விரும்பாதிருக்கவும் பழ வினைதானே கொடுப்பது போலவிருப்பாகிய சுகத்தையும் விரும்பாதிருக்கவுந் தானே கொடுக்குமென் றறிந்து எதிர்காலத்து ஒன்றையுங் கரு தாதிருந்து, உயர்ந்த கம்பத்தின்கணின்று அந்நிலைக்குத் தவறு வாராது அதன்கட் கருத்தை வைத்துத் தியாகியைப் புகழ்தல் முதலிய நோக்கு வித்தைகளைப் பழக்கத்தாற் காயத்திற் காட்டு தல் செய்யும் கழைக்கூத்தர் போலவும், பரபுருஷனை நச்சிய ஓர் மடந்தை அவன்மேற் கருத்தை வைத்துத் தன் புருஷனுக்குப் பழக்கத்தால் செய்யும் ஏவற்றொழில் களைச் செய்தல் போலவும் விவேகிகள் ஐம்பொறிகளால் ஐம்புலன்களைப் பற்றினாலும் அவ் விடயங்களையே இன்பமென்று கருகி அவற்றின்கண் ஆசை யுறாது இறைவன் திருவடிக்கண் ஆசைவைத்து இரவும் பகலும் இடைவிடாது நிற்பர். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குரு வருள் பெறுதற்குமுன் இந்நிலையில் நின்றனர் என்பது,—

"கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோ லும்பரைக் காப்பான்
பள்ளக் காரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவல னிடைப்புறத் தொழிலுமுட் கொண் [டார்.

எனவரும் செய்யுளாற் றெளிக.

(தொடரும்)

பத்திராசிரியர்.

பாரதம்பாடிய பெருந்தேவனார்.

(கககஉ - ம் பக்கத் தொடர்ச்சி.)

ஐங்குறுநூறு :— இந்நூலிற் கடவுள் வாழ்த்தியற்றிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்; உரை நடை இயற்றுதலிலும் செய்யுள் செய்தலிலும் மிக்க ஆற்றலுடையவர். இவர் பிறந்த இடம் தொண்டைநாடு. இது—

"சீருறும் பாடலபன் னீரா யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனூர்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே"

என்னும் தொண்டைமண்டல சதகச்செய்யுளால் விளங்குகின்றது.

திருவள்ளுவமாலையில், 'எப்பொருளும் யாரும்' என்னும் வெண்பா இவர் இயற்றியதாகத் தெரிதலால், இவர்காலம், உக்கிரப் பெருவழுதியார் காலமென்றும், அஃது இற்றைக்கு 1800 அல்லது 2000 வருஷத்திற்கு முற்பட்டதாக இருக்கலாமென்றுந் தோற்றுகின்றது.

பெருந் தேவனாரென்பது இவரது இயற்பெயர்; இஃது இவரியற்றிய பாரதச் செய்யுளைத் தொல்காப்பியப் பொருளதிகார வுரையில் மேற்கோளாக எடுத்துக்காட்டும் இடங்களில் நச்சினார்க்கினியர் "இச் செய்யுள் பெருந்தேவனா ரியற்றியது" என்று புலப்படுத்தி யிருத்தலால் துணியப்படும். பாரதத்தை (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக) இயற்றிய தனாற் பாரதம் பாடிய பெருந்தேவனாரென்றும் இவர் வழங்கப்படுவர்.

இவரியற்றிய கடவுள் வாழ்த்துக்களுள் ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, இவைகளிலுள்ளவைகள் சிவபெருமான் துதிகளாகவும், நற்றிணையிலுள்ளது திருமால் துதியாகவும், குறுந்தொகையிலுள்ளது முருகக்கடவுள் துதியாகவும் உள்ளன வாதலாலும், பாரத வெண்பாவில் இவர் விநாயகக்கடவுளைத் துதித்திருத்தலானும், இவருடைய கடவுள் வழிபாடும் கொள்கையும் இன்னவெனத்துணிந்து சொல்லக்கூடவில்லை.

இவரியற்றிய கடவுள் வாழ்த்துக்கள் நற்றிணை முதலிய தொகைநூல்களின் முன்னர் வைக்கப் பெற்றிருத்தலும், ஐந்தாமறையாகிய பார

தத்தை இவரியற்றி யிருத்தலும் இவருடைய முதன்மையையும் கல்விப் பெருமையையும் தெரிவிக்கின்றன.

பாரத வெண்பாவில் இடையிடையே அரசனொருவன் இவரால் பாராட்டப் படுகிறன், அவனது இயற்பெயர் தெரியவில்லை. (பக் 9-10)

மேலே கூறியதும் இப்புலவர் பெருமானைப்பற்றிய அபிப்பிராய மாம். இப்பொழுது இவர் கோபிநாதராயர், சுப்பிரமணிய ஐயர் போன்றார் கூறுவதுபோல் ஒன்பதாம் நூற்றாண்டில் வசித்த ஒரு புலவரா அன்றி கி. பி. முதல் நூற்றாண்டில் வசித்த புலவரா என்று ஆராயவேண்டியது நமது கடமையாகிறது. இல்லையாயின் கடைச்சங்க காலமே 9-ம் நூற்றாண்டென்பார் கூற்றுவலியுடைய தாவதோடு தமிழ்ப்பாஷையின் பெருமையே நேற்றைய செய்தி யென்பதாகும்.

தேவனார் பிற்காலத்தார் என்று கூறும் கட்சியாருக்குச் சாதகமாயுள்ள காவலன் வாழ்த்து என்று காணப்படுவது, "வண்மையாற் கல்வியான்.................தெள்ளாற்றில் வென்றானோ-டியார் வேந்தரேற்பா ரெதிர்" என்னும் பாடலேயாகும். தெள்ளாற்றில் போர் வென்றவன் நந்திவர்மன் என்பது நந்திகலம்பகத்தில்.

* * * * *

அலர்கதிர்வே லுடைநந்தி யவனிநா ராயணனு
முலகுடையான் திருமுடியு முள்ளமுமே யுவந்தனையே
(பாயிரம்-4)

உரைவரம் பிகந்த வுயர்புகழ்ப் பல்லவ
னமரர் கோமா னடுபோர் நந்தி
யமர்வெள் ளாற்று மேவலர் கடந்த
செருவே லயர்வு பாடினன் கொல்...... (23)

கமரிச் செந்நெற் காடணி சோலைக் காவிரி வளநாடன்
குமரிக் கொண்கன் கங்கை மணாளன் குரைகழல் விறனந்தி
யமரிற் றெள்ளா றஞ்சிய நெஞ்சத் தரசர்க டிரள்போலு
மிவரிக் கானத் தேகிய வாறென் னெழினகை யிவளோடே. (28)

பாடின ராவரோ வேந்தர் பலராவி
பீடிய மாகதத்தோர் பிச்சத்தார்—கூடிடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போத்தார் கலந்து. (31)

வினையின் சிலம்பன் பரிவு மிவடன் மெலிவு மென்புந்
தினையும் விளைந்தது காணது வாழிதெள் ளாற்று நண்ணார்
முனையு மன்றேற முனிந்த பிரான்முனை யிற் பெருந்தேன்
வனையும் வடவேங் கடத்தார் தண் சாரலின் வார்புனமே. (33)

பகரங்கொ ணெடுந்தில்லைப் பனிவிசும்பிற்
பறித்தெறியப் பண்டு முந்நீர்
மகரங்கொண் டெக்கூல வரைதிரித்த
மாலென்பர் மன்னர் யானை
சிகரங்கள் போன் மடியத் தெள்ளாற்றுக்
கண்சிவந்தான் றென்னன் றொண்டை
நகரங்கை படுபிரா னந்தி நரபதி பணிகோ
நங்கள் கோவே. (38)

குலமரபு மொவ்வாது குடித்தொழிலுக்
கோவாடக் குறையுங் கொற்றச்
சில விரவுஞ் சித்தியாத் தெள்ளாற்றிற்
செருவென்ற செங்கோ னந்தி (19)

ஏறுபாய விளைவித்த தெல்லாங் கருங்கு ழற்கொங்கை
வீறுபாயக் கொடுக்கின்ற விட்டதுயர்கோ வென்கின் றீர்
மாறுபாயப் படைமன்னர் மாவுந்தேருந் தெள்ளாற்றி
லாறுபாயச் சிவந்ததோ ளிணைகாவிரிவள நாடனே. (86)

என்று கூறப்பட்டிருக்கிறது கொண்டு அறியக் கிடக்கின்றது.

(தொடரும்)

S. சோமசுந்தர தேசிகர்,
இலக்கணவிளக்க பரம்பரை.
திருவாரூர்.

பத்துப்பாட்டு.

(கஉகூ - ம் பக்கத் தொடர்ச்சி.)

கூ0-வது மலைபடுகடாம்:—இது-கூஅங - அடிகளையுடையது; இதற்குக் கூத்தராற்றுப்படை யெனவும் பெயர் கூறுவர்; பரிசில் பெறக் கருதிய கூத்த னொருவனைப் பரிசில் பெற்றானொருவன் பல்குன்றக்

கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னனென்பானிடத்துச் செல்வித்ததாகப் பாடப்பட்டது. (கூத்தர் - ஆடுவோர்) இது, நன்னன் பாற் செல்லும் வழியின் தன்மையையும், அவ்வவ்விடத்துள்ள உணவின் வகையையும், அவனது மலைசோலை காடுகளின் வளங்களையும், அவன் வள்ளன்மையையும், ஆற்றலையும், அவனது சுற்றத்தொழுக்கங்களையும், அவனது நாளோலக்க இருப்பையும், நவிரமென்னு மலையிற் காரியுண்டிக் கடவுளென்னுந் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது மகிமையையும், அவனது முன்னோர் பெருமையையும், அவனூரின் இயல்பையும், சேயாறென்னும் ஆறு முதலியவற்றின் வளங்களையும் கூறுகின்றது.

இந்நூல், "திருமழை தலைஇய இருணிற விசும்பின்" எனத் தொடங்கி "குன்று சூழிருக்கை நாடுகிழ வோனே" என முடிந்துளது.

[மலைக்கு யானையை யுவமித்து அம்மலைக்கட்பிறந்த ஓசையை யானைமத மான கடாம் எனச் சிறப்பித்ததனால், இப்பாட்டு மலை படுகடாம் எனப் பெய ரெய்திற்று. இது "மலை படு கடாஅமாதிரத்தியம்ப" என்ற அடியாலறிக.]

இதில் வரும் 'தீயினன்ன வொண் செங் காந்தள்' என்ற அடிக்கு "நன்னனென்னும் பெயர் தீயோடடுத்த தன்மையின் ஆனந்த மென்னுங் குற்றமாய்ப் பாடினோரும் பாடப்பட்டோரும் இறந்தார்" என்று ஆளவந்தபிள்ளை யாசிரியர் குற்றங்கூற, அதற்கு நச்சினார்க்கினியர் "இந்நூல் செய்த கௌசிகனார் ஆனந்தக் குற்றமறியாமற் செய்யுள் செய்தாரேல் நல்லிசைப் புலவராகார்; இவர் செய்யுளையும் ஏனைச் செய்யுட்களுடனும் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் சங்கத்தார் கோத்த மையிற் குற்றமுடையதன்று. சொல் னிலையை நோக்குமிடத்தும் அன்ன வென்னும் பெயரெச்ச உவம உருபு தீ யென்னும் பெயரையடுத்து நின்ற இன்சாரியையுடன் புணர்ந்து நின்றது. நன்னனென நகர முதலும் னகரமெய்யீறுமாய் நின்ற சொல்லாயினன்றே அக்குற்றமுளதாவதென மறுக்க. நன்ன வென அண்மைவிளி யேற்றமுன்னிலைப் பெயரென்னின் இப்பாட்டுப் படர்க்கையேயாய் நிற்றலிற் குற்றமின்று என மறுக்க. நூற் குற்றங் கூறுகின்ற பத்துவகையில் "தன்னானொரு பொருள் கருதிக் கூறல்" என்னுங் குற்றத்தைப் பின்னுள்ளோர் ஆனந்தக் குற்றமென்பதோர் குற்றமென்று நூல் செய்ததன்றி, அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் இவ்வானந்தக் குற்றமொன்று கூறாமை

யிற் சான்றோர் செய்யுட்கு அவ்வாறுளவேனுங் குற்றமெனக் கொள்ளா ரெனமறுக்க" என்று கூறினர்.

பத்துப்பாட்டின் விவரம் ஒரு வகையான் முடிந்தது.

(இப்பத்துப் பாட்டைப்பற்றிய ஆராய்ச்சி முதலியன மற்றோர் கால் விரித்தெழுதி வெளியிடுதலுங்கூடும்.)

பத்திராசிரியர்.

தமிழ்நாட்டுத் தற்காலத்தார்.

(கஉஎ-ம் பக்கத் தொடர்ச்சி.)

வினை

மேனாட்டார்கள் தங்கள் நாட்டில் உணவுப் பொருள் அகப்படா மையின் அதுமலிந்த நாட்டார் விழைவனவற்றை ஓர்ந்தறிந்து அவர் வியக்கும்படி நுணுக்கமாக இயற்றியளித்து அவர்களை மகிழ்வித்துத் தம க்குவேண்டியவைகளைப் பெற்று மகிழ்கின்றார்கள்.

நம் நாட்டில் அவ்வுணவுப் பொருள் மிகுதியாக அகப்படும் ஆத லின் அவைகளை வளர்க்கவேண்டிய முயற்சியை நாம் சோர்வின்றிப் புரிவது கடைமையாகும். அவ்வுணவுப் பொருள் வளர்த்தற்கு இயை வனவற்றை இனிது கைக்கொள்வதன்றி அவைகளையறவே ஒழித்து வேற்றுத் தொழில்களிற் புகுந்து உள்ளவைகளை இழப்பதும் இழக்க வேண்டுமென உபதேசிப்பதும் இவைபோன்ற பிறவும் அறியாமைப் பாலனவாம். எவ்வாறெனில் நாமும் அம் மேனாட்டாரைப் போலவே வேற்றுக் கைத்தொழில்களில் புகுவோம் ஆகில் நம் உணவுப்பொருளின் வளர்ச்சி குன்றுவதால் அப்பொருளை அறவே இழக்க நேரிடும் உணவுப் பொருள் வளர்ச்சி இன்மையால் உணவுப் பொருளையும் உணவையும் இழந்தபின் நாம் வேற்றுக் கைத்தொழிலை விளங்கவைப்பது வியப்பே யாகும். இவ்வேது வாலிரு பகுதியை இழந்த நாம் இறுதி யடைவ தோடு நம்மை நம்பி எதிர் பார்த்திருக்கும் அவர்களையும் இறுதியாக்கிப் பழிப்பிற்கு ஆளாவோம் என்பது திண்ணம்.

அல்லாமலும் துப்பாக்கி முதலியன வற்றைக் கண்டறியாமல் முன்னோர்கள் இருந்தார்களெனப் பல பிதற்றுகின்றோம். அவை பொருந்

தாது. தூர்ச்செயலே இயல்பாய் அமைந்த நமக்கு அவைகளை அளிப்பாராகில் நாளாகி இறக்கும் நாம் வீணே விரைவில் இறந்து விடுவோம். இவைகளால் இருவகைத் தீங்குகளும் நேரிடும். ஒன்று விரைவில் மாளுவது. மற்றொன்று மாளுவதின் துன்பம் அறியாது அதனிடந் திண்மையொடு சேறல். பலர்கூடித் துப்பாக்கி முதலியனகொண்டு களம்புக்குப் போர் புரிவாராகில் அவைகளால் உண்டாய வெடிகள் பட்டதும் படுவரன்றே. ஆனதுபற்றி மரணாவஸ்தையையும் போராலுறும் துயரையும் பிறர் அறியாராகி மீண்டும் போர்வேட்கை யுற்றழிகின்றனர். கோல் முதலிய துணைகொண்டு ஒருவரை ஒருவர் நையப் புடைப்பதினால் அடியுண்டு நோயுற்றுப் பன்னாள் வருந்துவர். அவ்வாறு வருந்தும் அவரும் கண்டாரும் போர் என்பதைக் கனவிலும் கருதார். இவைகளால் உலக நன்மைக்குத் துப்பாக்கி முதலியன பொருந்தா எனக் கண்டுகொள்க. இதற்குச் சான்றாக நன்னெறியிற் செலுத்தாத புல்லறிவாண்மையை உடைய செருமன் தேயத்தார் பன்னாளும் ஈட்டிவைத்த போர்க்கருவிகள் அவர்க்கும் பிறர்க்கும் நன்மை அளித்தனவா? அல்லாமலும் அக்கருவிகளை முதல் முதல் கண்டவன் அதனால் பிரயோகிக்கப்பட்டவன் நன்மையுறுவானென்றா இயற்றினான். அல்லதூஉம் ஒருவன் தீங்கு செய்தவுடன் இவைகளைக் கண்டறிந்தானா? இல்லையே! இனிமேல் யாராவது கெடுதி புரிந்தால் அவர்களைக் கொன்றுவிடலாம் என்ற குமார்க்கப் புத்தியல்லவா அவனறிவு. இப்போது தீங்கியற்ற எண்ணங்கொண்டது இவனா உலகமா? தீங்கு செய்யாத ஒருவன் இனித்தீங்கு செய்வானென அனாவசிய அனுமானத்தால் அவனை அவமே கொல்வதற்காக இயற்றுவது அவர்களுக்கே ஆகட்டும். நம் முன்னோர்களுக்கது வேண்டாம் இவைகளை இயற்றும் வல்லமை நம் முன்னோர்க்குண்டென்பதை நமது பண்டைப்பனுவல்களால் செவ்வன் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு இயற்றினோர் நமது அறியாமை நினைந்து அளிக்காராயினர் என்க. ஒரு எழுத்தாணியும் வழியிற்கிடக்கும் பனையோலையும் கொண்டு கல்விப்பகுதிகளைப் பெறவேண்டியும் புறவூர்க்கேகாமல் வேண்டும் பொருள்களை நம்மூர்களிலே இயற்றி மேன்மைபெறவேண்டியுமன்றோ நீராவிப் பொறிச்சகட முதலியவைகளை அளிக்காராயினர். அவ்வாறளிப்பின் பிற நாட்டில் அகப்படும் என்ற இருமாப்பால் ஒவ்வொருவரும் சோம்புவர். மன ஆசைகளை அதிகப்படுத்தி உள்ளவைகளை இழந்து வருந்துவர். நோய் முதலியவைகளாலுழலுவர். வண்டிக்கு உபயோகப்படுத்து மூலமாக உணவுப்பொருள் வளர்ச்சிக்கு இன்றியமையா எருமுதலிய உதவும் ஆடு மாடுகளை விருத்தியாக்கார் என்ற இவைகளும் அவைகளை அவர் உதவாததற்குக் காரணமென்க.

இங்குக் காட்டியவைகளால் ஒவ்வொருவருந் தங்கள் தங்கள் நாட்டின் தட்ப வெப்பங்களுக்குத் தக்கவண்ணம் இயன்ற உடை நடை உணவு கல்வி உரையாடல் வினைமுதலியன வற்றையே உடையார்களெனவும் அவ்வாறு கைக்கொள்ளாராகில் அவர்களுக்கு எல்லாத் தீமைகளும் நேரும் எனவும் விளக்கியதூஉம் கண்டுகொள்க. இனி நமது முற்காலத்தாரது செய்கைகளையும் அவற்றால் அவர் அடைந்த பயன்களையும் ஒருசிறிது விவரிப்பாம்: நமது பண்டைத்தமிழர்கள் தமது நாட்டின் தட்ப வெப்பங்களுக் கேற்றவண்ணம் இயன்ற, உணவு, உடை, நடை, கல்வி, உரையாடல், வினை முதலியனவற்றை முறைமை வழுவாது கைக்கொண்டவாற்றால் அவர்கள் சரீர ஸௌக்கியத்திலும் நட்புரிமையிலும் கல்வியிலும் நாகரீகத்திலும் இவைபோன்ற பிறவற்றிலும் அது காறும் பிறர் கண்டறியாத மேம்பாடு பொருந்தியவராய் இருந்தார்கள் என்பதை அவர்களால் இயற்றப்பட்ட பண்டைத் தண்டமிழ்ப்பனுவல்களில் இருந்து பரக்க இது பொழுதும் காணலாம். உதாரணமாக நம்மவரிற் சிலர் இப்போது பெரிது பெரிதென வீணிற் புகழும் புறமொழியில், நிலநூல், நாட்டுநூல், உள்ள வமைப்புநூல், விண்ணூல், இவை போன்ற பிறநூல்களென்னும் பெயர் மாத்திரையே காட்டிவருகின்றார்கள். அம்மட்டோடு அவர்கள் செல்லாது நமது மொழியில் அவைகள் இல்லை எனவும் அறியாமையாற் பிதற்றிவரும் பித்தடங்க ஒரு மருந்து கூறுகின்றாம்; நமது சங்கநூல்களில் ஏதாவது ஒருபாட்டை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால் முதலில் நிலத்தின் இயற்கை வருணனையால் நிலநூலையும், முன்னரசாண்டாரது செய்கைகளையும் போர்க்குறிப்புக்களையும் உவமை முகத்தால் நாம் என்றுஞ் சோராவண்ணம் விளக்கிப் போதலின் நாட்டுநூலையும் ஒருவரோடொருவர் உரையாடு முறையையும் அவைகளால் அடையும் பேறுகளின் முறையையும் விளக்கிப்போதலின் உள்ளவமைப்பு நூலையும், இவ்வாறிவை நேர்ந்தார் இவைபெறுவர் என்னு முகத்தால் நெறிநூலையும், இவைபோன்ற இன்றியமையாதன வாகிய பிறவைகளையும் விளக்குதலிற் பிறநூல்களையும் நாம் வெள்ளிடைவரையெனக் கண்டுகொள்ளலாம். இப்போதும் நமது பூர்வீகத்தமிழர் சரிதைகளை ஆராய்வது சங்கநூல்களாலே என்ற உண்மை யாவருக்கும் ஒப்ப முடிந்த பெற்றித்தாம். நமது தாய் சருக்கரை வழிமருந்து கொடுத்து நம் நோய் களைவதுபோல நமது புன்மையை அறிந்த சான்றோர்கள் நாம் விழைந்து நாட்டஞ் செலுத்துவதற்கு முதலாகிய காமவழியாலும் நம்மைப்பிணித்து எல்லா நல்லறநூல்களின் ஸாரங்களையும் புகட்டி நம் மடமையை அறவே அழித்தார்கள். அல்லாமலும் இதுவரையிலும் நம்

மவரில் ஒருவராலேயும் கண்டறிந்து பாராட்டப்படாததும் புறமொழி யாளர்கள் அறியாததும் மிக்கவிரய அனுபவமுதிர்ந்ததும் ஆகிய ஒன்றை ஈண்டுவிளக்க வேண்டியிருக்கிறது. மக்கட்பிறப்பினர் முற்றறிவினர் இன்மையால் தாம் தாம் செய்யும் ஒருசிறு செய்கையிலும் சில நன்மைகளும் பலதீமைகளும் உண்டாகுமன்றே? அவ்வாறாகில் தாம் தாமே ஒவ்வொருநூலையாப்பது எங்ஙனம் முறையாகும். ஆதலினன்றோ சங்கத்தார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிஷயங்களின் ஒவ்வொரு பகுதியைச் செவ்வனே எடுத்துக்கொண்டு தத்தம் நுண்ணிய அறிவுகளாற் பலகாலும் ஆராய்ந்து அவைகளை ஒவ்வொரு செய்யுளாகயாத்தும் அவ்வாறியாத்தவற்றைத் தமது கூட்டத்தார் முன்னிலையில் எடுத்துக்கூறியும் ஒழுங்கு உறுத்துவார்கள். அங்ஙனம் புரிந்தனவற்றைப் பலகாலும் பற்பலரும் பழகிவந்து அவ்வவற்றின் நலங்கனிந்தவைகளைப் புலன் கனிந்து கண்டு பின்னர் பற்பலர் விழைவிற்கீடுபட்டு அவைகளை ஒவ்வோரினமாகத் தொகுத்து நூல்களாக்கிக்கொள்வர். இவ்வுத்தம வழக்கம் புறமொழியாளரிடத் தெள்ளளவேனும் கண்டதுண்டா? அன்றியும் நிலங்களின் பகுதிகளுக்கும் காலப்பகுதிகளுக்கும் ஏற்றவழியே மக்கட்பிறப்பினரும் பிறவும்குண முதலியன கொள்கின்றன எனவிளக்கும் அகத்திணை இயலையும், போர்ப்பிரிவுகளையும் அறம்பொருள்களின் பிரிவுகளையும் பிறவற்றையும் ஒருமுறை பெறக்கோத்த புறத்திணை இயலையும் இவைகளின் உட்பிரிவுகளாய் முதல் கரு உரிப்பொருள்களையும் களவு கற்பு என்பனவைகளையும் பொருள், மெய்ப்பாடுகளையும் இவ்வேதுவிற் சில கொண்டறியும் உள்ளுறை இறைச்சி முதலியவைகளையும் புறமொழியாளர் விரைவில் அறிந்துகொள்ள இயலுமா?

இவ்வாறுயவைகளை முற்றும் நமது முன்னோர் அடைவதற்குக் காரணம் தமது நாட்டுத் தட்பவெப்பங்களுக்கு ஏற்ற உணவு முதலியவைகளை முறைவழுவாது கையாண்டு வந்தமையாலென்க.

இவர்களுக்குப் பின்னர் வந்த நமது முன்னோர்கள் தமதுசெய்கை மாறுபாட்டால் நமது ஒப்புயர்வற்ற நிலைமையைச் சற்று இழக்கநேர்ந்தது. அது, அவர்கள் குளிர்நாட்டாராகிய ஆரியரைக்கண்டு மயங்கி அன்னார் செயல்களைப் பின்பற்றியதாலேவே. குளிர்நாட்டாராகிய அவரது பழக்கவழக்கங்கள் அவருக்கு நன்மை பயப்பதன்றித் தமக்கு ஒவ்வாமையை அறியாராகி அவர்கள் தலைமைக்குட் பணிந்து புகுந்து அடிமையாகி வன்மை அறிவு ஒழுக்கம் பெருமை நாகரீகம் முதலாயினவற்றை இழந்து அவர்களை ஒரு பெரிய தெய்வமாகவும் தம்மையும் தமது சார்பையும் பேயாக

வும் புனைந்துகொண்டு பாழ்பட்டனர். இவ்வே போலச் சைனர்களாலும் துருக்கர்களாலும் பிறராலும் முற்றுங் குறைப்பட்டனர் எனினும் தமது நாட்டுச் செயல்களில் ஒரு கால் பங்கையாவது விடாது பழகி வந்தமையால் நமது கண்களுக்குப் பூர்வீகத் தமிழரது பெருமையின் உருவம் கனவுகண்டதுபோல ஊகித்தறிய இடனாகின்றது.

இங்குக்காட்டிய விளக்கங்களால் ஒவ்வொரு நாட்டாரும் அவ்வவர் பூர்வீக முறைகளை வழுவாது ஒழுகிவந்தாலன்றி அமையுந் தீமைகளை விலக்கி அமையாத நன்மைகளைப் பெற முடியாதெனவும் நாம் செவ்வனவே ஓரற்பாலனவாம்.

(தொடரும்)

K. S. நவநீத கிருஷ்ணபாரதி,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், இராமநாதன் காலேஜ்,
சுன்னாகம்.

பாப்பற்றிய இராகங்கள்.

குறள்

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற்கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண்

தேவாரமுதலிய பாக்களையும் சடகோபர் முதலிய ஆழ்வார்கள் பாடல்களையும் தேவகானத்தில் பண்ணோடு பாடுதல் சைவர்வைணவர்களின் புராதன நெறியாம். இந்நாளிலோ மனம்போனபடிக்கெல்லாம் பாடல்களை நம்மவர் பாடிவருகின்றார்கள். பாடலில் வல்லவர்கள் எப்பாடலையும் சாரீர நயத்தாலும் ஸங்கீத உணர்ச்சியாலும் பாடி நம்மைக் களிப்பிக்கின்றார்கள். இவ்வாறாயினும் சிற்சிலபாக்களுக்கு நம்முன்னோர் பொருத்தமுள்ள ராகங்கள் இனையின்னவையென்று கண்டு அப்படியே பாடிவருகின்றார்கள் அப்படிப்பாடுங்கால் அவ்விராகங்களின் நயம் இனிது புலப்படும்.

அவைவருமாறு:—

1. வெண்பாவிற்குச் சங்கராபரணம்.
2. அகவலுக்குத் தோடி.
3. கலிப்பாவுக்குப் பந்துவராளி.

4. கலித்துறைக்குப் பைரவி.
5. தாழிசைக்குத் தோடி.
6. விருத்தத்திற்கு, 1. கலியாணி, 2. காம்போதி, 3. மத்தியமாவதி.
7. உலாவிற்கு, ஸௌராஷ்டிரம்.
8. தேவாரத்திற்கு, பூபாளம்.
9. பிள்ளைக்கவிக்கு, கேதாரகௌளம்.
10. பாணிக்கு, கண்டாரவம்.

வேறு வகை.

1. மகிழ்ச்சிராகம் : (1) காம்போதி, (2) தங்யாசி, (3) சாவேரி.
2. துக்கராகம் : (1) ஆகிரி, (2) கண்டாரவம், (3) நீலாம்பரி, (4) பியாகடை, (5) புந்நாகவராளி, (6) வராளி.
3. யுத்தராகம் : நாட்டை.

வேறு வகை.

காலஇராகம்.

1. வஸந்தகாலராகம்: (1) காம்போதி, (2) அசாவேரி, (3) தங்யாசி.
2. மாலையிராகம் : (1) கல்யாணி, (2) காபி, (3) கன்னடம், (4) காம்போதி.
3. யாமராகம் : (1) ஆகிரி.
4. விடியற்காலராகம் : (1) இந்தோளம், (2) இராமகலி, (3) தேசாக்ஷரி, (4) நாட்டை, (5) பூபாளம்.
4. உச்சிராகம்: (1) சாரங்கம், (2) தேசாக்ஷரி, (3) ஆகிரி, (4) இந்தோளம், (5) இராமகலி. (6) பூபாளம்.

மற்ற இராகங்கள் எக்காலத்திற்கும் பொதுவாம்.

இங்ஙனம்

தி. வேங்கடராம ஐயங்கார்.
ஸோமயாஜி,
நில்லையம்பூர்த் தமிழ்ப் பண்டிதர்,
கும்பகோணம்.

அம்பிகாபதியும், அரசிளங்குமரியும்.

இஃதோர் தமிழ் நாடகம். இயல் இசை நாடகம் என்னு முத்தமிழ்க்குள் இயற்றமிழ் இலக்கண இலக்கியங்களே இப்போது கிடைக்கின்றன. ஏனை இருவகைத் தமிழும் அரியவாயின. நாடகத் தமிழ்க்கு இயலும் இசையும் உதவியாம். இந்நாடகமே அறிவினுயர்ந்தோர் குறைந்தோர் யாவரையும் எளிதின் மகிழ்விப்பது. இதனாற் பெரும்பயனுண்மையோர்ந்து, சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் இப்புத்தகம் வெளியிட்டனர். இது தமிழ்க்குபகாரமே. பழயநாடகத் தமிழ் இலக்கிய முறையின் குறிப்பு, சிலப்பதிகாரம் கோவை முதலியவற்றில் இருப்பதைத் துணைக்கொண்டியற்றப்பட்டது; இனிமையான வசனநடையும் செய்யுள் நடையும் உடையது; காதற்சுவையைக் கவின்பெறப் புனைவது; நீதிபலவற்றை நேரிதினிகழ்த்துவது; இது கம்பரது புதல்வர் அம்பிகாபதியின் சரிதமே. இதைப் படிப்போர்க்குத் தமிழ்ச்சுவையோடு மகிழ்ச்சி பெருகுமென்ப தொருதலையாம். கிரவுன் சைசில் 160 - பக்கங்களுடையது. விலை அணா-10. ரிப்பன் பிரஸ் முதலிய இடங்களிற் கிடைக்கும். ஆக்கியோர் விலாசத்திற்கும் எழுதிப் பெறலாம்.

மங்கையர்க்கரசி காதல் முதலிய கதைகள்.

இப்பெயர்கொண்டதொரு புத்தகம் புதுவை - கம்பகிலயம் ஸ்ரீமத் - வ - வெ - சுப்பிரமண்ய ஐயர் அவர்களால் வெளியிடப்பட்டது. இவர் முன் சந்திரகுப்தன் சரித்திரம் எழுதி வெளியிட்டதை எவருமறிவர். இப்போது இம்மங்கையர்க்கரசி காதல் முதலியன வீரம்முதலிய சுவை பயப்ப நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. படிப்போர்க்குப் பல வகையினும் மனங் களிக்கும்படி செய்யும் வாய்ப்புடையது. சில சந்தர்ப்பங்களில் உலகவழக்கில் பேசுவதுபோலவே எழுதப்பட்டிருக்கிறது. மற்றைய நன்மையையும் வாங்கிப்படித்தவர்கள் அறிந்துகொள்ளுவார்கள். இது யாவர்க்கும் உதவும். புத்தகம் ஒன்றின் விலை அணா 10. இதன் ஆசிரியர்க்கு எழுதிப் பெறலாம்.

அறிவிப்பு.

நமது "தமிழ் மகவு" ஒவ்வொரு தமிழ் மாதங்களிலும் உ௦ வ க்குள் அதன் சந்தாதாரர்கள் வசம் சேரும். அவ்வாறு சேராவிடின் உடனே அங்கங்குள்ள போஸ்டு மானேஜருக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். மாதந்தோறும் கவனமாய் எல்லா விலாசங்களையும் இருமுறை பார்வையிட்டே பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. பத்திரிகை மேற்படி தேதிக்குள் வந்து சேராவிடின் அது எமது குறையென் றெண்ணற்க. போஸ்டுகளிலும் விசாரித்துக் கிடைக்காவிடின், பத்திரிகை மானேஜருக்கு எழுதினால் பெறலாம்.

க௦ - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பண மனுப்பும்படி செய்பவர்கட்கு இனாமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும். மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீஸ்
நெ. 48. ரங்கப்பிள்ளை வீதி
புதுவை.